பக்கங்கள்:-26

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2058 | தை 13 | செவ்வாய்க்கிழமை | 27.01.2026 | அதிர்வு 180

## கிளிநொச்சியில் ரயிலுடன் மோதி வயோதிபர் சாவு!

கிளிநொச்சியில் ரயிலுடன் மோதி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் 06



# பெப்ரவரி 4ஆம் திகதி கரிநாள் வடக்கு - கிழக்கில் போராட்டம்

## ஆதரவு திரட்டும் யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம்

*(எஸ்.நிதர்ஷன்)*

**இலங்கையின் சுதந்திர தினமான எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதியை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போராட்டம் நடத்தத் தீர்மானித்துள்ள யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், அதற்காகப் பொதுமக்களை அணிதிரட்டி வலுச்சேர்க்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.** 07

## கல்விச் சீர்திருத்தங்களை முறையாக முன்னெடுக்க சஜித் அணியினர் ஆதரவு!




கல்விச் சீர்திருத்தங்களை முறையாக முன்னெடுப்பதற்கு நாமும் எமது ஆதரவைத் தருகின்றோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

நேற்றுவிசேடகாணொளி ஊடாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 06

### வயல் காவலுக்குச் சென்ற

## குடும்பஸ்தர் எரிந்த நிலையில் சடலமாக மீட்பு!



திருகோணமலை, நாமல்வத்த பகுதியில் வயல் காவலுக்குச் சென்ற குடும்பஸ்தர் எரிந்த நிலையில் நேற்று சடலமாக 06




ஒரு காலத்தில் ஈழத் தமிழினம் வீர புருஷர்களான போராளிகளின் பின்னால் அணிவகுத்து நின்றது. தங்களைப் பகிரங்க வாழ்வில் வெளிப்படுத்தாவிட்டாலும், மிகத் துணிச்சலாகத் தங்கள் அடையாளத்தைக் காட்டி, தங்கள் தலைமைகளில் இருந்த இயக்கங்களை முன்னிறுத்திப் போராடிய தலைவர்களைக் கண்டோம். அந்த வரிசையிலே மிக உயர்ந்த இடத்தில் தலைவர் பிரபாகரன் இருக்கிறார்.

அத்தகைய வீர மறவர்களின் பின்னால் வழி நடந்த தமிழினம், இப்போது முகப்புத்தகங்களில் தங்கள் முகங்களைக் கூட காட்டாத அநாமதேயங்களின் பின்னால், அவர்களின் அபத்தமான பிரசாரங்களின் பின்னால், மந்தை மாடுகளாக நடை போடும் அவலத்தைக் காண்கிறோம்.

தங்களை யார் என்று வெளிப்படுத்த திராணியற்ற – முதுகெலும்பில்லாத – பேடிகள் ஆளுக்கொரு முகப்புத்தக கணக்கைத் திறந்து வைத்துக் கொண்டு, இல்லாததையும் பொல்லாததையும் பொய்யையும் புனைவையும் எழுதுகிறார்கள். 06




# எந்த நிபந்தனைகளுமின்றி இலங்கைக்கு இந்தியா உதவி

## குடியரசு தின நிகழ்வில் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவிப்பு

பொறுப்புணர்வு மற்றும் சிறந்த அயலுறவு கொள்கையின் அடிப்படையில், எந்தவித நிபந்தனைகளுமின்றி இலங்கைக்கான இந்தியாவின் உதவிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

இந்தியாவின் 77ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு நேற்று கொழும்பில் உள்ள இந்தியன் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய அவர், இந்தியாவின் வெளியுறவு கொள்கையில் இலங்கைக்கு விசேட இடம் வழங்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், “இரு நாடுகளுக்கிடையிலான உறவு நம்பிக்கை, நல்லெண்ணம் மற்றும் மக்களிடையிலான உறவுகள் மூலமாக மேலும் வலுப்பெற்றுள்ளது.

மின் சக்தி வலையமைப்பு ஒருங்கிணைப்பு, சம்பூர்சூரியமின்சக்திதிட்டம், திருகோணமலை எரிசக்தி மைய அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

ரயில் பாதை புனரமைப்பு, துறைமுக அபிவிருத்தி, கப்பல் மற்றும் விமான சேவைகள் மூலம் இரு நாடுகளுக்கிடையிலான பௌதீக இணைப்புகள் வலுப்பெற்றுள்ளன.

இலங்கையின் டிஜிட்டல் அடையாள அட்டை திட்டம், யு.பி.ஐ. கொடுப்பனவு முறைமை போன்றவற்றின் மூலம் டிஜிட்டல் ஒத்துழைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டில் இலங்கைக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில், இந்திய முதலீடுகள் முக்கிய பங்காற்றியுள்ளன.

இலங்கைக்கான இந்திய அபிவிருத்தி ஒத்துழைப்பு 7.5 பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடந்துள்ளது. அதில் 850 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நன்கொடைகளாக வழங்கப்பட்டுள்ளன.

டித்வா புயலின் போது இந்தியா முதற்கட்டமாக உதவி வழங்கியது. மனிதாபிமான உதவிகள் துரிதமாகவும் நிபந்தனையற்ற வகையிலும் வழங்கப்பட்டன.

இந்தியா, இலங்கையின் நம்பிக்கைக்குரிய மற்றும் நம்பகமான பங்காளியாகத் தொடர்ந்து செயற்படும்.” – என்றார்.

# இலங்கையின் ஏற்றுமதி வருவாய் 17.25 பில்லியன் டொலராக உயர்வு




இலங்கையின் 2025 ஆம் ஆண்டுக்கான மொத்த ஏற்றுமதி வருவாய் 17.25 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

இது முந்தைய ஆண்டை விட 5.6 சதவீத வளர்ச்சியாகும்.

இதில் சரக்கு ஏற்றுமதி மூலம் 13.57 பில்லியன் டொலர்களும், சேவை ஏற்றுமதி மூலம் 3.67 பில்லியன் டொலர்களும் வருவாயாகக் கிடைத்துள்ளன.

நாட்டின் பொருளாதார மீட்சியில் ஏற்றுமதித் துறை முக்கிய பங்கு வகிப்பதாக இந்த தரவுகள் காட்டுகின்றன.

பொருளாதார ரீதியிலான சவால்களுக்கு மத்தியிலும், ஏற்றுமதி வருவாயில் ஏற்பட்டுள்ள இந்த முன்னேற்றம் நாட்டின் வர்த்தக சமநிலைக்கு வலுச்சேர்ப்பதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மருந்து தட்டுப்பாடு, தரமற்ற மருந்துகள் குறித்து குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு



புற்றுநோய் சிகிச்சைக்கான 40 வகை யான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும், சந்தையில் பதிவு செய்யப்படாத தரமற்ற மருந்துகள் விற்பனை செய்யப்படுவதாகவும் கூறி, இது குறித்து விசாரணை நடத்துமாறு நேற்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் மற்றும் சுயாதீன தொழிற்சங்கக் கூட்டமைப்பின் இணை அழைப்பாளர் வைத்தியர் சமல் சஞ்சீவ ஆகியோர் இந்த முறைப்பாட்டைச் சமர்ப்பித்தனர்.

புற்றுநோய் வைத்தியசாலையில் மாத்திரம் சுமார் 40 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால், நோயாளிகள் அதிக விலை கொடுத்து வெளிச்சந்தையில் மருந்துகளை வாங்க வேண்டியுள்ளதாக வைத்தியர் சமல் சஞ்சீவ சுட்டிக்காட்டினார்.

சந்தையில் கிடைக்கும் பல மருந்துகள் பதிவு செய்யப்படாதவை எனக் குறிப்பிட்ட அவர், அந்த மருந்து போத்தல்களுக்குள் இருப்பது சாதாரண நீரா, உப்பு நீரா அல்லது பக்டீரியாக்களா என்பது எங்களுக்குத் தெரியாது எனத் தனது அச்சத்தை வெளிப்படுத்தினார்.

இறக்குமதி செய்யப்படும் மருந்துகளின் தரம் மற்றும் அவற்றின் பதிவுகளை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இங்கு வலியுறுத்தினார்.




# யாழ். திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் இந்தியாவின் 77 ஆவது குடியரசு தின விழா

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில், இந்தியாவின் 77 ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கலாசாரப் பெருவிழா, நேற்று திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் விசேட அதிதியாகக் கலந்துகொண்டார்.

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ஸ்ரீசாய் முரளியின் அழைப்பின் பேரில் நடைபெற்ற இந்த மாலை நேர நிகழ்வில், கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலான வண்ணமயமான கலை நிகழ்ச்சிகள் அரங்கேறின.

தொடர்ச்சி▼
















# யாழ். திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் இந்தியாவின் 77 ஆவது குடியரசு தின விழா

தொடர்ச்சி▲

நிகழ்வில் கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர், இந்தியத் துணைத் தூதுவருக்குத் தனது குடியரசு தின வாழ்த்துகளைப் பரிமாறிக் கொண்டதுடன், கலாசார நிகழ்வுகளையும் கண்டு களித்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணத் தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பி னர்கள், முன்னாள் நாடாளுமன்ற மற் றும் மாகாண சபை உறுப்பினர்கள், வடக்கு மாகாண அமைச்சின் செயலா ளர்கள், திணைக்களத் தலைவர்கள், மதத் தலைவர்கள், சிவில் சமூகப் பிரதி நிதிகள், வர்த்தகப் பிரமுகர்கள், ஊடக வியலாளர்கள் மற்றும் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் எனப் பல ரும் கலந்துகொண்டனர்.


















# வடக்கு மாகாண அபிவிருத்தியில் அநுர அரசாங்கம் அதிக அக்கறை

## கனேடியத் தூதுவரிடம் ஆளுநர் சுட்டிக்காட்டு

“போர் முடிவுற்ற கடந்த 16 ஆண்டுகளில் ஆட்சிக்கு வந்த அரசுகளை விட, தற்போதைய அரசு வடக்கு மாகாணம் தொடர்பில் கூடுதல் கரிசனையுடனும், அக்கறையுடனும் செயற்படுகின்றது. வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரம் தொடர்பில் இவ்வாறானதொரு அக்கறை இதுவரை காண்பிக்கப்படவில்லை.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை மற்றும் மாலைத்தீவுகளுக்கான கனடா உயர்ஸ்தானிகர் இசபெல் மார்ட்டினுக்கும் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையிலான குழுவினருக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வடக்கு மாகாணப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விவசாயம் மற்றும் மீன்பிடித் துறைகளே காணப்படுகின்றன. ஆனால், இங்கிருந்து இவை மூலப்பொருட்களாகவே வெளியே கொண்டு செல்லப்படுகின்றன. இவற்றை வடக்கிலேயே பெறுமதிசேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றுவதற்கான தொழிற்சாலைகள் எம்மிடம் இல்லை. இத்துறையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வர வேண்டும்.

இந்தியாவுடனான விமானச் சேவை விரிவுபடுத்தப்பட்டுள்ளமையால் வடக்குக்கு வரும் சுற்றுலாவிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பலாலியிலுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் வசதிகள் மேலும் மேம்படுத்தப்பட்ட பின்னர், நிச்சயமாக அதிகளவான சுற்றுலாவிகள் வருகை தருவார்கள். இதன் ஊடாக வடக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறை பாரிய வளர்ச்சியடையும்.

முதலீட்டாளர்கள் வடக்கில் முதலிடுவதற்குச் சாதகமான சூழல் தற்போது உருவாகியுள்ளது. அரசால் வடக்கில் மூன்று முதலீட்டு வலயங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அதேபோல், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மீள இயக்குவதற்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட “வடக்கு முதலீட்டு உச்சி மாநாடு” முதலீட்டாளர்கள் மத்தியில் மிகச் சாதகமான சமிக்ஞையை ஏற்படுத்தியுள்ளது.” – என்றார்.

வடக்கு மாகாண சபை இயங்கிய காலத்தில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கும், கனடாவின் ரொரன்டோ மாநகரத்துக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட நட்புணர்வு ஒப்பந்தம் தொடர்பில் ஆளுநர் சுட்டிக்காட்டினார். அந்த ஒப்பந்தத்தின் கீழான செயற்பாடுகளை மீளவும் வலுப்படுத்துவது தொடர்பில் கரிசனை செலுத்துமாறும் அவர் உயர்ஸ்தானிகரிடம் கேட்டுக்கொண்டார்.

இச்சந்திப்பின் போது, கடந்த காலத்தில் மீள்குடியேறிய மக்களுக்கான உதவிகளை வழங்கியமைக்கு கனேடிய அரசுக்கு ஆளுநர் நன்றிகளைத் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த உயர்ஸ்தானிகர், டித்வா பேரிடர் பாதிப்பு மற்றும் அதிலிருந்தான மீள்கட்டுமானப் பணிகள் குறித்தும், வடக்கு மாகாணத்தின் கூட்டுறவுத் துறையின் வளர்ச்சி குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

வடக்கு மாகாணத்தின் அடிப்படைப் புள்ளிவிவரங்கள், முதலீட்டு வாய்ப்புகள், மாகாண அமைச்சுகளின் செயற்பாடுகள் மற்றும் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் மாகாண அதிகாரிகளால் உயர்ஸ்தானிகருக்கு விரிவான விளக்கம் அளிக்கப்பட்டது.

இச்சந்திப்பில் ஆளுநரின் செயலாளர், ஆளுநரின் இணைப்புச் செயலாளர்கள், மாகாண சபை அதிகாரிகள் மற்றும் கனேடியத் தூதரக அரசியல் விவகாரச் செயலர் உள்ளிட்ட குழுவினர் பங்கேற்றனர்.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவற்றை உண்மையென நம்பி அவற்றுக்குப் பின்னால் தொடரும் ஒரு கேவலமான அரசியல் பாதையை ஈழத் தமிழர்களில் கணிசமானோர் மேற்கொள்கின்றனர் என்பது மறுக்க – மறைக்க – மறக்க – முடியாத உண்மை.

மூன்று, நான்கு தினங்களுக்கு முன்னர் அப்படி இரண்டொரு செய்திகள் வந்தன. அவை முகப் புத்தகங்கள், வட்ஸ் அப்புகள் உட்பட சமூக ஊடகங்களில் பரவலாக பேசப்பட்டன. பலரும் அதை தங்களுக்குள் பகிர்ந்து கொண்டு கியாதிப் பட்டனர். அப்படி ஒன்று 'மட்டக்களப்பு இரகசியம்' என்ற பெயரில் வந்தது. அதன் பெயரே அது 'கொஸிப்' கணக்கு என்பதைப் பறைசாற்றும் விடயம். அத்தகைய 'கொஸிப்' விடயங்கள் என்றால் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு நாய் போல் அலையும் நம்மவர்கள் பலரும் அதைப் பின் தொடரத் தவறவில்லை.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள சி.மு.இராசமாணிக்கம் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் அமரர் சி.மு.இராசமாணிக்கத்தின் 113 ஆவது ஜனன தின நிகழ்வில் பங்கு பற்றுவதற்கு வருகை தரவிருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் பொதுச் செயலாளர் சுமந்திரன் ஆகியோருக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டம் என்று அந்த முகம் தெரியாத நபர்கள் நடத்தும் முகப்புத்தகத்தில் தொடர்ந்து செய்தி வெளியாகியிருந்தது.

அந்த முகப்புத்தகச் செய்தி பரவலாக பல மட்டங்களிலும் பரிமாறப்பட்ட போதிலும், போராட்டம் நடத்த யாரும் வரவில்லை. தங்களை ஒளித்துக் கொண்டு, முகப்புத்தகங்கள் ஊடாக சின்னத்தனமாகக் கப்ஸா போராட்டம் நடத்தும் பேடிகளை நம்பி யாரும் போராட்டத்துக்கு வரவேயில்லை. அது மாத்திரமல்ல, அந்த ஜனன தின நிகழ்வின் முடிவில் நன்றி உரை தெரிவித்துப் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், அந்த நிகழ்வு தொடர்பில் பெரும் போராட்டம் என்று அறிவித்து, அந்த நிகழ்வை பறைசாற்றுவித்த மட்டக்களப்பு இரகசியங்கள் என்ற அந்த முகப்புத்தக கணக்குக்கு நன்றி தெரிவித்தார். அது மாத்திரமல்ல, முகப்புத்தகக்காரர்களின் அழைப்பை ஏற்றுப் போராட வருபவர்களை வரவேற்று உபசரிக்கத் தான் தயாராகப் போதிய ஆயத்தங்களுடன் காத்திருந்தார்கள் எனவும் சாணக்கியன் தெரிவித்தார். அப்படி அவர் உரையாற்றிய போது மண்டபத்தின் பின் வரிசையில் இருந்து ஒரு தொகுதியினர் கைகாட்டித் தாங்கள் தான் அப்படிப் போராட வருபவர்களை வரவேற்க காத்திருந்தவர்கள் என்பதை அடையாளப்படுத்தினார்கள். தன்னுடைய அந்த அணிக்கும் சாணக்கியன் நன்றி தெரிவித்தார்.

நல்ல காலம். மட்டக்களப்பு இரகசியத்தைப் பரவலாக பிரசாரப்படுத்திய பிரதிநிதிகள், அதை நம்பிப் போராட வந்திருந்தால் நல்ல பாடம் படித்திருப்பார்கள் என்று தான் தோன்றுகின்றது.

அதே நாளில், அதே சமயத்தில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்டின் வீதி இல்லத்தின் முன்னால் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானத்திற்கு எதிராக சட்டத்தரணிகளின் பெயரில் போராட்டம் ஒன்றும் நடக்கும் என்று இது போன்ற முகப்புத்தக கணக்கு ஊடாகத் தகவல் பரவலாகப் பரிமாறப்பட்டது. அந்தப்போராட்டக்காரர்களையும் அன்றைய தினம் யாழ்ப்பாணம் மாட்டின் வீதியில் காண முடியவில்லை.

ஒரு காலத்தில் சென்னை மரீனா கடற்கரையில் ஜல்லிக்கட்டு தடைக்கு எதிராக பெரும் போராட்டம் ஒன்றை – வரலாற்றில் முன்பின் இல்லாத விதத்தில் – மக்கள் திரண்டு முன்னெடுத்தார்கள். அதற்கான அழைப்பு சமூக ஊடகங்கள், முகப்புத்தகங்கள் வாயிலாக மட்டுமே பரிமாறப்பட்டன.

அத்தகைய தகுதி நிலையில் இருந்த சமூக ஊடகங்களை, முதுகெலும்பில்லாத – தங்களை முகம் காட்டத் திராணியில்லாத – பேடிகள் – பயந்தாங்கொள்ளிப் பிரகிருதிகள் தங்கள் கைவரிசைக்குப் பயன்படுத்தத் தொடங்கியதனால் சமூக ஊடகங்களின் மதிப்பே கெட்டுச் சீரழிந்துவிட்டது.

இந்த விடயத்தை நேற்று முன்தினம் களுவாஞ்சிக்குடியில் நடைபெற்ற நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் அத்தகைய இரண்டு முகப்புத்தக கணக்குகளை சுட்டிக்காட்டி, நார் நாராகக் கிழித்துத் தொங்க விட்டார்.

ஒன்று – மட்டக்களப்பு இரகசியம். அடுத்தது – யாழ்ப்பாணப் புலனாய்வு. இந்த இரண்டுமே முதுகெலும்பில்லாத – கீழ்த்தரமான – கேவலமான – மூன்றாம் தரமான – முகப்புத்தகக் கணக்குகள். அவற்றைப் பின் தொடர்ந்து, அவை பரிமாறும் வதந்திச் செய்திகளை உண்மை என்று விழுங்கிப் பரப்புகின்ற பிரகிருதிகள் தமிழ் மக்கள் மத்தியில் நிலை பெற்றிருக்கும் வரை, தமிழினத்திற்கு விடிவு கிடைக்கப் போவதில்லை. அந்த முகப்புத்தகக் கணக்குகளை நடத்தும் பேடிகளையும் விட, அவர்களின் கதைகளை காவி, நம்பி, அதனைப் பின் தொடரும் பொதுமக்கள்தான் தமிழினத்தின் கேவலமான புல்லுருவிகள் என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

---

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உதயநகர் பகுதியில் சைக்கிளில் வந்த வயோதிபர் ஒருவர் ரயில் கடவையைக் கடக்க முற்பட்டுள்ளார்.

இதன்போது, அனுராதபுரம் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த ரயிலுடன் மோதுண்டு மேற்படி வயோதிபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

ஆனந்தபுரத்தைச் சேர்ந்த 82 வயதுடைய சபாபதி என்பவரே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

## கல்விச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"பலவீனமான இந்த அரசின் கல்விச் சீர்திருத்தங்களை முன்னெடுக்கும் திட்டத்தில், 6 ஆம் தர பாட அலகுச் சீர்திருத்தங்களை முறையாக முன்னெடுக்கத் தவறியதால் ஏராளமான பிள்ளைகள் இன்று பல்வேறு பாதிப்புக்களைச் சந்தித்துள்ளனர்.

கல்விச் சீர்திருத்தங்களை இடைநிறுத்திய பழியை எதிர்க்கட்சியின் மீது போடுவதற்கு அரசு முயன்ற போதிலும், அந்தச் சீர்திருத்தங்களைத் தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசே இடைநிறுத்தியது.

6 ஆம் தரம் முதல் கல்விச் சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படும் என இலட்சக்கணக்கான பெற்றோர்களும் பிள்ளைகளும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாலும், அரசு இதனை ஒத்திவைத்ததன் காரணமாக அவர்களின் எதிர்பார்புகள் கானல்நீராக மாறிப்போயுள்ளன.

எனவே, கல்வித்துறையைச் சேர்ந்த நிபுணர்களுடன் கலந்துரையாடி, ஆபாச விடயங்களை நீக்கி, சரியாகவும் விரைந்தும் இந்த வருடமே இந்தக் கல்விச் சீர்திருத்தங்களை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கல்வித்துறையில் முற்போக்காகச் செயற்படும் நிபுணர்கள் காணப்படுகின்றனர். அவர்களுடன் கலந்துரையாடி முற்போக்கான முடிவை எடுக்குமாறு யோசனை முன்வைக்கின்றேன்.

கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக இந்த அரசு முறையான கலந்துரையாடலை முன்னெடுத்தால், எதிர்க்கட்சியும் தங்கள் கருத்துக்களை முன்வைக்கத் தயார்.

இந்தச் சீர்திருத்தங்களை முறையாக முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பைப் பெற்றுத் தர நாம் தயார்." – என்றார்.

---

## குடும்பஸ்தர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மீட்கப்பட்டுள்ளார்.

அதே பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான எம்.தாசுதீன் (வயது 61) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு அவருடைய வயலுக்குக் காவலுக்குச் சென்றவர் நேற்றுப் பகல் வரைக்கும் வீட்டுக்கு வராத காரணத்தால் அவரைத் தேடி பக்கத்து வீட்டார் சென்றுள்ளனர்.

மேற்படி நபர் வயலில் அமைக்கப்பட்டிருந்த கூடாரத்துக்கு உள்ளே குளிர் காரணமாக தீ மூட்டிய நெருப்புக்குள் எரிந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

மொரவெவ பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று அந்தச் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த மரணம் தொடர்பில் மொரவெவ பொலிஸார் பல கோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# போதை சாரதிகளை கண்டறிய 'நடமாடும் ஆய்வகங்கள்'



ஆட்டோ மற்றும் கனரக வாகனங்களை போதைப்பொருள் பாவித்த நிலையில் செலுத்தும் சாரதிகளைக் கண்டறிவதற்காக, நடமாடும் ஆய்வக வசதிகளைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த அந்த நிறுவகத்தின் தலைவர் பேராசிரியர் யு. சி. பி. பெரேரா, இந்த விசேட வேலைத்திட்டம் எதிர்வரும் மாதங்களில் நாடு தழுவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் என குறிப்பிட்டார்.

முன்னோடித் திட்டமாக, கொழும்பு பெஸ்டியன் மாவத்தையில் முன்னெடுக்கப்பட்ட சோதனையில் 57 பயணிகள் பஸ் சாரதிகள் இந்த நடமாடும் ஆய்வகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அவர்களில் 10 சாரதிகள் பல்வேறு வகையான போதைப்பொருள்களைப் பயன்படுத்தியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில், பொலிஸாரின் ஒத்துழைப்புடன் இத்தகைய திடீர் சோதனைகள் இனிவரும் காலங்களில் தீவிரப்படுத்தப்படவுள்ளன.

## பெப்ரவரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதன்படி, மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் நேற்று கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு சென்று, அங்குள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கங்கள், பொது அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதி களைச் சந்தித்து கலந்துரையாடினர்.

மேலும், எதிர்வரும் சில தினங்களில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள எட்டு மாவட்டங்களுக்கும் சென்று, போராட்டத்துக்கான ஆதரவைத் திரட்டும் கலந்துரையாடல்களை முன்னெடுக்கவுள்ளதாக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தமிழர் தேசத்தின் மீது நூற்றாண்டுகளாகச் சூழ்ந்துள்ள பேரினவாதத் தீயிலிருந்து தமிழர் தாயகத்தைப் பாதுகாக்கவும், தலைமுறைகள் தாண்டிய இனத்தின் இருப்பை உறுதிப்படுத்தவும், வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டத்திலும், கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி போராட்டம் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.









நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அபாயத்தில் இளம் சமூகம்

இலங்கையில் தற்கொலை செய்வோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை குறித்து இப்பத்தியில் ஓரிரு தினங்களுக்கு முன்னர் பிரஸ்தாபித்திருந்தோம். இப்போது நாட்டில் இளைஞர்களிடையே மன அழுத்தத்தின் பாதிப்பு வேகமாக உயர்ந்து வருகின்றமை பற்றிய தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கையில் 10 முதல் 24 வயதுக்குட்பட்ட இளைஞர்களிடையே மன அழுத்தத்தின் பாதிப்பு 39 சதவீதம் வரை அதிகமாக உள்ளது என்று தேசிய மனநல நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் தம்மிக்க அழகப்பெரும தெரிவித்திருக்கின்றார்.

தேசிய மனநல நிறுவனத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முல்லேரியாவவில் உள்ள தேசிய மனநல நிறுவனத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய சமயம் டாக்டர் தம்மிக்க அழகப்பெரும இவ்விடயங்களைக் கூறியிருக்கின்றார்.

இலங்கையில் மனநோய் வளர்ந்து வரும் பொது சுகாதாரப் பிரச்சினையாகும். இது அனைத்து வயதினரையும் பாதிக்கிறது. இலங்கை மக்கள் தொகையில் சுமார் 13 சதவீதம் பேர் மனநலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சுமார் 3 சதவீதம் பேர் அன்றாட செயல்பாட்டைப் பாதிக்கும் கடுமையான கோளாறுகளை எதிர்கொள்கின்றனர் என அவர் கூறினார்.

இலங்கையர்களில் ஐந்தில் ஒருவர் அல்லது சுமார் 19 சதவீதம் பேர் மன அழுத்தத்தால் பாதிக்கப்படுகின்றனர் என்று கூறிய டாக்டர் தம்மிக்க அழகப்பெரும, தன்னுயிரை மாய்த்துக் கொள்ளுதல் உலகளவில் மற்றும் தேசிய அளவில் ஒரு பெரிய பிரச்சினையாக மாறியுள்ளது என்றும் கூறினார்.

மேலும்இளம்பருவத்தினரிடையே மனநலப் பிரச்சினைகள் மிகவும் கடுமையான நிலை என்றும் அவர் குறிப்பிட்டார். சுமார் 20 சதவீதம் பேர் தனிமையால் பாதிக்கப்படுகின்றனர். சுமார் 18 சதவீதம் பேர் தொடர்ச்சியான மனச்சோர்வு அறிகுறிகளைக் கொண்டுள்ளனர். சுமார் 15 சதவீதம் பேர் தன்னுயிரை மாய்த்துக்கொள்ளுதல் பற்றித் தீவிரமாக யோசித்துள்ளனர். மேலும் சுமார் 10 சதவீதம் பேர், குறிப்பாக பெண்கள், தற்கொலைக்கு முயற்சித்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

அனைத்து இலங்கையர்களின் மன நலனை உறுதி செய்வதற்கு மனநல மேம்பாடு, முன்கூட்டியே அடையாளம் காணுதல் மற்றும் நோயாளிகளுக்கு சிகிச்சையை எளிதாக அணுகுவது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிறப்பு மனநல மருத்துவமனைகளை உருவாக்குதல், சமூக அடிப்படையிலான பராமரிப்பு மற்றும் மனநலத்தை ஆரம்ப சுகாதார சேவைகளில் ஒருங்கிணைப்பதன் மூலம் மனநல சேவைகளை வலுப்படுத்துவதில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்றும் டாக்டர் தம்மிக அழகப்பெரும மேலும் கூறினார்.

போதைப் பொருள் பாவனை போன்ற மோசமான சமூகச்சீரழிவுகள் நமது இளம் சமுதாயத்தைத் தாக்கியுள்ள பின்னணியில், அவர்களின் மன ஆரோக்கியத்தைச் செப்பனிட்டுப் பேணுவதன் மூலம் வளமான அடுத்த சந்ததியை உருவாக்குவதற்கு நாடு காத்திரமாக பங்காற்ற வேண்டி இருக்கின்றது.

இளைஞர்களின் மனநிலை பற்றிய புள்ளிவிவரங்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் அரசுக்கும் அபாய எச்சரிக்கையைத் தந்திருக்கின்றன என்பது மறுக்க முடியாதது.



# சுண்டிக்குளத்தில் கடல் அரிப்பு மிக மோசம் கடலோடு செல்லும் மீன்பிடி உபகரணங்கள்

**(மரியசீலன்-திலைக்ஸ்)**

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ஜே.435 கிராம சேவையாளர் பிரிவான சுண்டிக்குளம் பகுதியில் கடல் அரிப்பின் தாக்கம் அதிகரித்து வருகின்றது.

சுண்டிக்குளம் கிராமத்தை கடந்த வருடம் நவம்பர் 28 ஆம் திகதி டித்வா புயல் கடுமையாகத் தாக்கியது. இதனால் முழுமையாக அந்தப் பிரதேசம் பாதிக் கப்பட்டுள்ளது. இதனால் கடற்றொழி லாளார்களின் பெறுமதிவாய்ந்த தொழில் உபகரணங்களும் இருப்பிடங் களும் கரையோரத் தென்னங் காணிக ளும் அழிவடைந்துள்ளன.

டித்வா புயலின் சீற்றம் காரணமாக கடல் 150 மீற்றர் தூரத்திற்கும் அதிகமாக உட்புகுந்த வண்ணமே உள்ளது.

இவ்விடயத்தை அரச அதிகாரிக ளுக்குத் தெரியப்படுத்தியும் இதுவரைக் கும் யாரும் வந்து பார்வையிடவில்லை யென அப்பகுதி மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



# வடக்கு மாகாண விவசாயக் கண்காட்சி நேற்று ஒட்டுசுட்டான் விவசாயப் பயிற்சி நிலையத்தில்

## அனர்த்த இழப்பீடு வழங்கும் செயற்பாடும் ஆரம்பித்துவைப்பு

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு பிரதி மாகாண விவசாயப் பணிமனையின் ஒழுங்குபடுத் தலில் வடமாகாண விவசாயக் கண்காட்சி முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் விவசாயப் பயிற்சி நிலையத்தில் நேற்று இடம் பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளரின் தலைமையில் “காலநிலைச்சவால்களை எதிர்கொண்டு நிலைபேறான விவசாயத்தை நோக்கி“ எனும் தொனிப்பொருளில் இந்த விவசா யக் கண்காட்சி இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கடந்த டித்வா புயல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட விவ சாயிகளுக்கான இழப்பீடுகளை வழங் கும் செயற்பாடும் முதற்கட்டமாக ஆரம் பித்துவைக்கப்பட்டுள்ளது.

காலநிலை சவால்களை எதிர் கொண்டு நெற்பயிற்செய்கை மேற் கொள்ளல், தேனிவளர்ப்பு, காளான் வளர்ப்பு, சேதன உரத் தயாரிப்பு, கால் நடை வளர்ப்பு, சுதேச மருத்துவப் பயிர்ச் செய்கை, ஒருங்கிணைந்த விவசாயம் உள்ளிட்ட பல்வேறு விவசாய செயற் பாடுகள் குறித்து இதன்போது விருந்தி னர்களுக்கு விளக்கங்களும் வழங்கப் பட்டன.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர்களான துரைராசா ரவிகரன், உபாலி சமரசிங்க, வடமாகாண பிரதமசெய லாளர் திருமதி.தனுஜாமுருகேசன், முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சண்முகராஜா சிவஸ்ரீ, வடமாகாண விவசாயப் பணிப்பாளர் உள்ளிட்ட பலரும் பங்கேற்றிருந்தனர்.

# முல்லைத்தீவில் விவசாயிகளுக்கு வெளியான மகிழ்ச்சியான செய்தி


## நாளை முதல் நியாய விலையில் நெல் கொள்வனவு

(பா.சதீசன்)

முல்லைத்தீவில் நெல் சந்தைப் படுத்தல் சபையினர் விவசாயிகளுக்கு மகிழ்ச்சியான செய்தி ஒன்றை நேற் றையதினம் வெளியிட்டுள்ளனர்.

முல்லைத்தீவில் நெல் சந்தைப் படுத்தல் சபை நாளை – அதாவது 28 ஆம் திகதி தொடக்கம் நெல் கொள் வனவை நியாயமான விலையில் மேற் கொள்ள இருக்கின்றார்கள். இதன் மூலம் விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை நியாயமான முறையில் விற்பனை செய்ய முடியும்.

வெள்ளை, சிவப்பு நாட்டரிசி – கிலோ120 ரூபா, சிவப்பு, வெள்ளை சம்பா –கிலோ130 ரூபா, கீரிவ்சம்பா கிலோ-140 ரூபா எனக் கொள்வனவு செய்யப்பட இருக்கின்றது. அத்தோடு கொள்வனவு செய்யப்படும் நெல் ஈரப்பதன் 14 வீதத்திற்குள்ளாக இருக்க வேண்டும். நெல்லுடன் ஏனைய கலப் படங்கள் 1 வீதத்திற்குட்பட்டவையாகவும் ஏனைய நெல்லினங்களின் கலப்பு 6 வீதத்திற்குட்பட்டதாகவும் சப்பி 9 வீதத்திற்குட்பட்டதாகவும் இருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



MINISTRY OF AGRICULTURE
வீ அலெவி மண்டலய
நெல் சந்தைப்படுத்தல் சபை
PADDY MARKETING BOARD

PMB/OP/Paddy Pur./2025/26 Maha -02 — 2026.01.26

2025/26 ...

1\. ...

- ... 14%
- ... 1%
- ... 6%
- ... 9%

1

...th Floor, Housing Secretariat Building, Sir Chittampalam A. Gardiner Mw, Colombo 02.

2335411 | 2335469 | 2335412 2335471 | 2335410 2335414 | chairmanpmb@gmail.com

# காட்டுப் பகுதியில் தீக்காயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்பு!

தீக்காயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலி, உரகஸ்மன்ஹந்திய, கைலத்த பிரதேசத்தில் உள்ள காட்டுப் பகுதியில் மேற்படி குடும்பஸ்தரின் சடலம் நேற்று திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் உரகஸ் மன்ஹந்திய, கைலத்த பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய குடும்பஸ்தர் ஆவார்.

சடலம் மீட்கப்பட்ட இடத்தில் மரக்கி ளைகளும் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ள னர்.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை உரகஸ்மன்ஹந்திய பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# பலாலி விமான நிலையத்தின் சுற்றாடலில் வானத்தில் பட்டங்கள் பறக்க விடத் தடை!

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை சூழவுள்ள பகுதிகளில் பட்டங்களை வானத்தில் பறக்க விடு வதைத் தவிர்த்து கொள்ளுமாறு விமான நிலைய ஆணையகம் கேட்டுக்கொண் டுள்ளது.

வானத்தில் பட்டங்களை பறக்க விடுவதனால் , விமானங்களுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்புக்கள் காணப்படுவதனால் விமான நிலையத்தை சூழவுள்ள பகுதி களில் பட்டம் விடுவதனை தவிர்த்துக்கொள் ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தல் தொடர்பான சுவரொட்டிகள் விமான நிலையத்தை சூழவுள்ள காங்கேசன்துறை, மாவிட்டபு ரம், வறுத்தலை விளான், பலாலி, மயிலிட்டி உள்ளிட்ட பிரதேசங்களில் ஒட்டப்பட்டுள்ளன. அது தொடர்பிலான அறிவுறுத்தல்கள் அப்பகுதியில் ஒலி பெருக்கிகள் மூலமும் அறிவிக்கப்பட் டுள்ளது.

கடந்த வாரம் சென்னையில் இருந்து யாழ்ப்பாணம் வருகை தந்த விமானம் தரையிறங்க முற்பட்ட வேளை பட்டத்தி னால் சிரமங்களை எதிர்கொண்டதாகவும், அதனால் பாரிய விபத்து ஏற்படவிருந்த



நிலையில் தெய்வாதீனமாக விமானம் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டதாகவுன் தகவல்கள் வெளியாகி உள்ளமை குறிப் பிடத்தக்கது.

# டயானாவின் வழக்கு விசாரணை பெப்ரவரி 16 இற்கு ஒத்திவைப்பு!

முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில், சாட்சியங்கள் தொடர்பான மேலதிக விசாரணையை எதிர்வரும் பெப்ரவரி 16ஆம் திகதி நடத்த நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.



இந்த வழக்கு நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடவுச்சீட்டு பெறுவதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்குத் தவறான தகவல்களை வழங்கியமை மற்றும் செல்லுபடியாகும் விசா இல்லாமல் இலங்கையில் வசித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் டயானா கமகே மீது குற்றப் புலனாய்வுத் துறை வழக்கு பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





# முல்லை புதுக்குடியிருப்பில் காணாமல் போன இளைஞன் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு!

(பா.சதீசன்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் காணாமல்போன இளைஞரின் சடலம் விளையாட்டு மைதான கிணற்றில் இருந்து நேற்றுப் பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு சுமார் 7.30 மணியளவில், இந்த இளைஞனின் வீட்டிற்கு வந்த நபர் ஒருவர் வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் இந்த இளைஞனை ஏற்றி சென்றார் என்றும், அதன் பின்னர் அவர் தொடர்பில் எந்த தகவலும் கிடைக்கவில்லை என்றும், இதுவரை வீடு திரும்பவில்லை என்றும் அவரது தாயாரினால் நேற்றுக் காலை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாட்டையடுத்து சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் அந்த இளைஞனின் வீட்டிற்கு அருகாமை உள்ள விடியல் விளையாட்டு மைதானத்தில் உள்ள கிணற்று கட்டில் அவரின் தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டது. கிணற்றுக்குள் இளைஞருடையது எனக் கருதப்படும் காலணி ஒன்று காணப்பட்டது.

அதனையடுத்து கிணற்று நீரினை வெளியேற்றி தேடுதல் மேற்கொண்ட போது இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரம் பகுதியில் வசித்து வரும் 24 வயதுடைய பாலசுப்பிரமணியம் சாம்சன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# நாட்டில் வேண்டுமென்றே எதிர்க்கட்சி தேவையற்ற பீதியை ஏற்படுத்துகிறது

## பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு



நாட்டில் வேண்டுமென்றே அமைதியின்மையை உருவாக்கி, புதிய கல்விச் மறுசீரமைப்பை சீர்குலைக்க எதிர்க்கட்சியினரும், அதன் தலைவர் சஜித் பிரேமதாஸவும் முயற்சிக்கின்றனர் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர், எதிர்க்கட்சியின் இத்தகைய தன்னிச்சையான செயற்பாடுகளே புதிய கல்வி மறுசீரமைப்புகளின் சில அம்சங்கள் ஒத்திவைக்கப்படுவதற்கு முக்கிய காரணம் என்று குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“எதிர்க்கட்சியினர் பரப்பி வரும் தவறான கூற்றுகளால் பெற்றோர்கள் மத்தியில் தேவையற்ற பீதி ஏற்பட்டுள்ளது.

இது மறுசீரமைப்பு செயல்முறையின் மீது பொதுமக்களுக்கு இருந்த நம்பிக்கையை சீர்குலைத்துள்ளது.

மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்தும் எந்தவொரு நிலையிலும் சில குறைபாடுகள் இருப்பது இயல்பானது, ஆனால் அத்தகைய ஒவ்வொரு விடயத்தையும் மறுசீரமைப்பின் தோல்வியாக எதிர்க்கட்சி சித்திரிக்கிறது.

கல்வி மறுசீரமைப்பு ஒத்திவைக்கப்பட மாட்டாது. முன்மொழியப்பட்ட ஐந்து அளவுகோல்களில் நான்கரை அளவுகோல்கள் திட்டமிட்டபடி நடைமுறைப்படுத்தப்படும்.

தரம் ஆறு ஆங்கில பாடநெறி தொடர்பான ஒரு தொழில்நுட்பப் பிரச்சினை காரணமாகவே மிகக் குறைந்த எவிலான தாமதம் ஏற்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிக்கு எதிர்காலத்தில் அரசியல் ரீதியாக எந்தவித நற்பெயரும் இல்லை. அவர்களின் சீர்குலைவு நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது.” – என்றார்.

# டித்வா புயல் காரணமாக 173 பேரை காணவில்லை

## 6,680 பேர் இன்னும் முகாங்களில்




டித்வா சூறாவளியால் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 649 ஆக அதிகரித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த அனர்த்தங்களில் சிக்கி இதுவரை 173 பேர் காணாமல் போயுள்ளனர்.

காணாமல் போனவர்களில் கண்டியில் 69 பேரும், கேகாலையில் 38 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 32 பேரும் அடங்குகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அதிகபட்சமாக கண்டி மாவட்டத்தில் 243 மரணங்கள் பதிவாகியுள்ளன. இதற்கு மேலதிகமாக, பதுளை மாவட்டத்தில் 89 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 81 பேரும் உயிரிழந்துள்ளனர்.

தற்போது பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள 85 நிவாரண மையங்களில் 6,680 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

மீட்புப் பணிகள் மற்றும் காணாமல் போனவர்களைக் கண்டறியும் நடவடிக்கைகள் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# சபாநாயகருக்கு எதிரான பிரேரணையை கொண்டுவருவதற்கு மீண்டும் யோசனை



சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை உடன் கொண்டுவருமாறு எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்குத் தான் யோசனை தெரிவிப்பதாக ஐக்கிய மக்கள் கூட்டணியின் தேசிய அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து எதிர்க்கட்சிகளின் தலைவர்களுடனும், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தாத ஏனைய அரசியல் கட்சித் தலைவர்களுடனும் தான் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சபாநாயகர் சுயாதீனமாகச் செயற்படத் தவறியுள்ளதோடு, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குப் பேசுவதற்கு இடமளிக்காமல் ஜனநாயக விரோத முறையில் செயற்படுகிறார் என அவர் குற்றம் சுமத்தினார்.

இதற்கு முன்னரும் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பாக இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியம், பொதுநலவாய நாடாளுமன்ற ஒன்றியம் மற்றும் ஐரோப்பிய நாடாளுமன்ற ஒன்றியங்களுக்கு முறைப்பாடு அளித்திருந்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

சபாநாயகர் தனது கடமைகளைச் சரியாகச் செய்வார் என்ற நம்பிக்கையில் அப்போது நம்பிக்கையில்லாப் பிரேரணை தற்காலிகமாக நிறுத்தப்பட்டதாகத் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தற்போது நாடாளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகத்தின் பணியை எவ்வித விசாரணையுமின்றித் தன்னிச்சையாக இடைநிறுத்தியுள்ளமையானது நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மீதான பாரிய தாக்குதலாகும் எனவும், இதனால் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை உடனடியாகக் கொண்டு வருவது அவசியமெனவும் அவர் வலியுறுத்தினார்.

தற்போதைய அரசாங்கம் கணக்காய்வாளர் நாயகத்தை நியமிக்காது நாட்டின் கணக்காய்வு மற்றும் சட்டமா அதிபரின் செயற்பாடுகளில் தலையீடு செய்வதன் மூலம் சட்டத்தின் ஆட்சியைப் பலவீனப்படுத்தி வருவதாகவும், இப்போது நாடாளுமன்றத்தின் மீதும் இத்தகைய அழுத்தங்களைச் செலுத்தத் தொடங்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது மிகவும் பாரதூரமான நிலைமை எனக் குறிப்பிட்ட அவர், ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகச் செயற்படும் அனைவரும் இதற்கு எதிராக முன்வர வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# கொழும்பு முன்பள்ளி ஆசிரியர்களின் சம்பளம் 10,000 ரூபாவால் அதிகரிப்பு



கொழும்பு மாநகர சபையினால் நிர்வகிக்கப்படும் முன்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் மாதாந்த சம்பளத்தை 10,000 ரூபாவால் அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் இந்த சம்பள உயர்வு நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் 20,000 ரூபாவாக இருந்த முன்பள்ளி ஆசிரியர்களின் மாதாந்த சம்பளம், இனிவரும் காலங்களில் 30,000 ரூபாவாக அதிகரிக்கப்படும்.

அதேவேளை, கொழும்பு மாநகர எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்து மதங்களையும் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட அறநெறி பாடசாலைகளுக்கு வழங்கப்படும் மாணவர்களுக்கான காலை உணவு கொடுப்பனவு, 60 ரூபாவிலிருந்து 100 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நகரிலுள்ள ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்கும், மாணவர்களுக்கான நலன்புரி உதவிகளை மேம்படுத்துவதற்குமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர ஆணையாளர் பாலித நாணயக்கார தெரிவித்துள்ளார்.



## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம்:

# உள்ளூர் முகவர் அதிகாரிகள் வெளிநாட்டுக்கு செல்ல தடை

இலங்கை கடற்பரப்பில் பெரும் சுற்றாடல் பாதிப்பை ஏற்படுத்திய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தில், அதன் உள்ளூர் முகவர் நிறுவன பணிப்பாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு நீதிமன்ற தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனுக்கள், நேற்று உயர்நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு வந்தன.

அதன்போது, சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான மேலதிக மன்றாடியார் நாயகம் நெரின் புள்ளே குறித்த கப்பல் நிறுவனத்தின் இலங்கை முகவர் நிறுவனத்தின் பணிப்பாளர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்வதைத் தடுக்கும் வகையில், கொழும்பு நீதவான் நீதிமன்றம் மற்றும் மேல் நீதிமன்றங்களிடமிருந்து முறையான தடை உத்தரவுகள் பெறப்பட்டுள்ளன என உறுதிப்படுத்தினார்.

சிங்கப்பூர் கொடியுடன் 2021 ஆம் ஆண்டு மே மாதம் கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் பயணித்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீப்பரவல், சுமார் இரண்டு வாரங்களாகத் தொடர்ந்தது.

இதில் இருந்த 81 ஆபத்தான இரசாயனக் கொள்கலன்களில் இருந்து 25 டன் நைட்ரிக் அமிலம் மற்றும் பில்லியன் கணக்கான பிளாஸ்டிக் துகள்கள் இலங்கையின் ஆட்புல எல்லைக்கு உட்பட கடலில் கலந்தன.

இந்த நச்சுப் பொருட்களின் பரவலால் இலங்கையின் கடல்சார் சூழல் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது.

கடற்கரைகளில் வாரக்கணக்கில் இறந்த ஆமைகள், திமிங்கலங்கள் உள்ளிட்ட பல மீன்கள் கரை ஒதுங்கின.

கடலோர வாழ் மக்களின் வாழ்வாதாரம் சிதைந்து, பல்லுயிர் பெருக்கத்திற்கு ஈடுகட்ட முடியாத இழப்பு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தீர்வு கிடைக்காவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கை

## ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் எச்சரிக்கை

ரயில்வே திணைக்களத்தில் நிலவி வரும் நிருவாகச் சீர்கேடுகள் மற்றும் ஊழியர் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்படாவிட்டால், தமக்கு சட்டரீதியாக வழங்கப்பட்டுள்ள தொழிற்சங்க உரிமைகளைப் பயன்படுத்திப் போராட்டங்களில் ஈடுபடப் போவதாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்தச் சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், ரயில்வே திணைக்களத்தின் தொடர்ச்சியான நிருவாகத் திறமையின்மை காரணமாக பயணிகள் மட்டுமன்றி, ஊழியர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

நிலைய அதிபர்களுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு தொடர்பான இடைக்கால விதிமுறைகளை அமுல்படுத்துவதில் நிலவும் தாமதம், ஊழியர்களின் வேலைத்திறனையும் மனநிலையையும் கடுமையாகப் பாதித்துள்ளது.



அரச ஊழியர்களுக்கான அனர்த்தக் கடனை அரசாங்கம் 400,000 ரூபாவாக அதிகரித்துள்ள போதிலும், ரயில்வே திணைக்களம் அதனை 250,000 ரூபாவாகக் குறைத்து வழங்கத் தீர்மானித்துள்ளது.

இதுஅரசாங்கத்தின்தீர்மானத்தைஅவமதிக்கும்செயல் எனவும், ஊழியர்களுக்கு இழைக்கப்படும் அநீதி எனவும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

முறையற்ற பயணத் திட்டமிடல் மற்றும் ரயில் நேர அட்டவணைகளில் நிலவும் குளறுபடிகளால் பயணிகள் நாளாந்தம் பாதிப்படைகின்றனர்.

இதற்குத் திணைக்கள நிருவாகமே முழுப் பொறுப்பேற்க வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளுக்கு உரிய பதில் கிடைக்காவிடின், தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என அந்தச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.







# நாவிதன்வெளியில் தைப்பொங்கல் விழா நேற்றுக் கோலாகலமாக இடம்பெற்றது!

(வி.ரி. சகாதேவராஜா)

உழவர் திருநாளாம் தைத்திருநாளை முன்னிட்டு நாவிதன்வெளி பிரதேச சபையின் ஏற்பாட்டில் நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளர் இந்திரன் ரூபசாந்தன் தலைமையில் பொங்கல் திருவிழா நேற்று திங்கட்கிழமை கோலாகலமாக இடம்பெற்றது.

கலை கலாசார பாரம்பரிய அறுவடை, புதிர் எடுத்தல், நெல் குற்றி புத்தரிசி எடுத்து



பொங்கல் வைக்கும் நிகழ்வுகள் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ஐ.எஸ்.ஏ. கமல் நெத்மினியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

உழவர் கண்காட்சி மற்றும் பாடசாலை மாணவர்களால் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை பறைசாற்றும் வண்ணம் நடனங்கள், சிலம்பம் என பற்பல நிகழ்வுகள் இடம்பெற்றன.

அதிதிகள் அனைவருக்கும் தமிழர் மாண்பை எடுத்தியம்பும் விதமாக நினைவு சின்னங்கள் மற்றும் நவ தானியங்கள் அடங்கிய பொற்கிழிகள் வழங்கி பொன்னாடை போர்த்தி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த தமிழர் பாரம்பரிய பொங்கல் நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கமல் நெத்மினி கலந்து கொண்டார்.முன்னாள் நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளர், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய தவராசா கலையரசன், முன்னாள் பிரதி பிரதம செயலாளர் மு. கோபாலரெத்தினம், முன்னைநாள் தவிசாளர்கள் , நாவிதன்வெளி பிரதேச சபை உப தவிசாளர், நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர்கள், நாவிதன்வெளி பிரதேச சபை செயலாளர், சுகாதார வைத்திய அதிகாரி, பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.






# இலங்கை தமிழ் கலைஞர்களின் பங்களிப்புடன் இடம்பெற்ற ‘கலைஞர்களின் இதய சங்கமம்’

இலங்கையின் புகழ்பெற்ற நடிகையான திருமதி சாந்தா தலைமையில், இலங்கை தமிழ் கலைஞர்களின் பங்களிப்புடன் மிக பிரம்மாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ‘கலைஞர்களின் இதய சங்கமம்’ நிகழ்வு கடந்த சனிக்கிழமை கொழும்பு 6 ஹோட்டல் சபையரில் நடைபெற்றது.

கலைத்துறையில் நீண்டகாலமாகப் பங்காற்றி வரும் கலைஞர்களை ஒன்றிணைக்கும் ஒரு பொழுதுபோக்கு நிகழ்வாகவும், அவர்களைக் கௌரவிக்கும் விழாவாகவும் இது அமைந்திருந்தது.

இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக உலகப் புகழ்பெற்ற அறிவிப்பாளர் திரு பி.எச். அப்துல் ஹமீத் கலந்துகொண்டதோடு, அவுஸ்திரேலியாவில் வசிக்கும் ‘கூத்தாடி’ திரைப்படத்தின் தயாரிப்பாளரும் நடிகருமான செல்வின் தாஸ் மற்றும் அவுஸ்திரேலிய தயாரிப்பாளர் என்.எஸ். தனபாலசுந்தரம் ஆகியோர் இந்நிகழ்வு சிறப்பான முறையில் நடைபெற பெரும் ஆதரவை வழங்கியிருந்தனர்.

இந்நிகழ்வின் ஒரு முக்கிய அங்கமாக, வானொலி, நாடகம் மற்றும் திரைப்படத் துறை என கலை உலகில் ஆறு தசாப்தங்களுக்கும் மேலாகத் தனது அர்ப்பணிப்பை வழங்கிய மூத்த கலைஞர் திருமதி செல்வம் பெர்னாண்டோ கௌரவிக்கப்பட்டார். சிறந்த துணை நடிகைக்கான ஜனாதிபதி விருது பெற்ற இவருடைய 79 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு பிறந்தநாள் கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டதோடு, அவருடைய கலைப் பயணத்தைப் பாராட்டி 25,000 ரூபா பணப்பரிசும், நினைவுச் சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

சர்வதேச மனித உரிமைகள் குழுவின் துணைத் தலைவர் டாக்டர் எம்.என். முகமது நலீம், என்.ஈ. புரொடக்ஷன்ஸ் நிறுவனத்தின் நிறுவனர் சியாவுல் ஹசன் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் முன்னிலையில் இந்த கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்தும், கணவனை இழந்த பெண் ஒருத்தி தனது மகனுடன் இந்த சமூகத்தில் எதிர்கொள்ளும் சவால்களை மையமாகக்கொண்ட “ஜெய்வின் புரொடக்ஷன் நிறுவனத்தின் தயாரிப்பில்“, இயக்குநர் அர்ஷாத் நிஜாம் இயக்கத்தில் வெளியான ‘ஜடம்’ என்ற குறுந்திரைப்படம் விழாவில் திரையிடப்பட்டது.











# ஆட்சிக்கு வந்து ஒரு வருட காலத்திலேயே 33 வீதமான வாக்குறுதிகள் நிறைவேற்றம்!

## மட்டு. மாவட்ட அரச எம்.பி. கந்தசாமி பிரபு பெருமிதம்

(வாலகிருஸ்ணா)

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்திலேயே மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் 33வீதமானவை நிறைவேற்றப்பட்டுள்ளன. வரவு – செலவு திட்டத்தில் கடந்த காலத்தில் ஒதுக்கிய நிதி முழுமையாக மக்களுக்கு செலவு செய்யப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

செலவு செய்யப்பட்ட நிதியிக் எந்தவிதமான ஊழல்களும் நடைபெறவில்லையென்றும், எமது ஆட்சியில் ஊழல்வாதிகளுக்கு எந்த இடமும் வழங்கப்படாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வீடுகள் அற்ற மக்கள் வீடுகளை நிர்மாணிப்பதற்கும் வீடுகளை திருத்துவதற்குமான கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று மட்டக்களப்பு பழைய மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வறிய நிலையில் உள்ள மக்கள் வீடு ஒன்றை அமைப்பதற்கும் மிக மோசமான நிலையில் உள்ள மக்கள் தமது வீடுகளை திருத்திக்கொள்வதற்குமாக தொடர்ச்சியாக உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன்கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுமிருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபையின் தலைவர் ஞா.சுகுமாரன் தலைமையில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் செல்வி யதுஷாயினியின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு பிரதம அதிதியாக கலந்துகொண்டு இதனை வழங்கிவைத்தார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் தவிசாளர் ஞா. சுகுமாரன், அதிகார சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர் எஸ். ஜோன்ஸ், மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் மூன்று மாவட்டங்களிலும் வறிய நிலையில் உள்ள 703 குடும்பங்களுக்கு இந்த நிதியுதவிகள் கட்டம்கட்டமாக வழங்கப்பட்டு வருகின்றன எனக் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபையினர் தெரிவித்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த கந்தசாமி பிரபு –

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் இறுதிக்கட்டத்தை அடைந்து அதனை மக்களிடம் கையளிக்கும் வகையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

2025ஆம் ஆண்டு எங்களது முதலாவது வரவு –.செலவு திட்டத்தின் நிதியொதுக்கீட்டின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட பலவேலைத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

இதேபோன்று 2026ஆம் ஆண்டின் வரவு – செலவு திட்டம் ஊடாகவும் உட்கட்டமைப்புக்கு என பல மில்லியன் ரூபா ஒதுக்கீடுகளை மேற்கொண்டுள்ளோம். வீடமைப்புத் திட்டம் ஊடாகவும் கிராமத்திற்கு ஒரு வீடு என்ற திட்டத்தின் ஊடாகவும் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதேபோன்று கிழக்கு மாகாணசபைக்கு ஊடாக ஒதுக்கப்பட்ட நிதிமூலமும்பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆட்சிக் காலத்தில் ஆட்சிசெய்தவர்கள் ஊடாக வீடமைப்புக்கு வழங்கப்பட்ட நிதியென்பது மிகவும் குறைந்ததாகவேயிருந்தது. ஆனால் ஒட்டுமொத்தமாக கடந்த வருடம் மட்டும் நாங்கள் 142மில்லியந் ரூபாவை வீட்டுத்திட்டத்திற்காக வழங்கியிருக்கின்றோம். இதேபோன்று இந்த ஆண்டும் அதிகளவான நிதியை இந்த வீட்டு திருத்தத்திற்கு என வழங்குவதற்கு நாங்கள் தயாராகியிருக்கின்றோம்.

மக்களின் வரிப்பணம் திறைசேரிக்கு கொண்டுசெல்லப்பட்டு இவ்வாறான செலவுகள் முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த வருடம் 1200 ட்ரில்லியன் ரூபா திறைசேரியில் சேர்க்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி▼











# ஆட்சிக்கு வந்து ஒரு வருட காலத்திலேயே 33 வீதமான வாக்குறுதிகள் நிறைவேற்றம்!

தொடர்ச்சி▲

கடந்தஆட்சிக்காலத்தில் இதற்கு அதிகமான தொகை திறைசேரியில் சேர்க்கப்பட்டிருந்தாலும் அது தமது சொந்த நலனுக்காகவும் அவர்களின் குடும்பங்களுக்காகவும் அவர்களின் சகாக்களுக்காகவுமே செலவு செய்யப் பட்டிருந்தது. மக்களுக்கு அவற்றைக் கொண்டு சேர்க்கமுடியாத அரசாங்க மாகவே கடந்த காலத்திலிருந்தார்கள்.

நிதியை வீணடித்திருந்தார்கள், ஊழல், மோசடிகளில் ஈடுபட்டிருந்தார்கள், அபிவிருத்தி என்ற போர்வையில் காசை தமது பொக்கட்டுகளில் போட்டுக்கொண் டதையே கடந்த காலத்தில் காணமுடிந்தது.

ஆனால் இன்று இந்தத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பொறுப்பேற்றதன் பின்னர் மேல்மட்டங்களில் இருந்த ஊழல்வாதிகளை இல்லாமல் செய்திருக் கின்றோம்,ஊழல், மோசடிகளைக் குறைத் திருக்கின்றோம். புதிய அரசியல் கலா சாரம்ஒன்றைஉருவாக்கியிருக்கின்றோம்.

2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்த நாடு வங்குரோத்து அடைந்த நாடாக மாற்றப்பட்டிருந்தது. அன்றைய ஆட்சியாளர்கள் நிதியைத் தமது சொந்த தேவைகளுக்கு பயன்படுத்தி அவற்றை வீணடித்த காரணத்தினால் நாடு வங்கு ரோத்து நிலையை அடைந்தது. இதன் போதே நாட்டை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பொறுப்பேற்றது. ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பொறுப்புடனும் மிகுந்த அக்கறையுடனும் ஒவ்வொரு திட்டத்தினையும் முன்னெடுத்து வரு கின்றார்.

அண்மையில் வடமாகாணத்திற்கும் ஜனாதிபதி விஜயம் செய்தார். வடமாகா ணத்தில் கைவிடப்பட்டுள்ள தொழிற் சாலைகளை மீளுருவாக்கம் செய்வதற் கான நிதிகளை ஒதுக்கியிருக்கின்றார். பல தொழிற்சாலைகளை இயங்கச் செய்திருக்கின்றோம்.

இன்று ஜனாதிபதிக்கு வடமாகாண மக்கள் அதிக அன்பினையும் ஆதரவி னையும் வழங்குகின்றார்கள். சுதந்தி ரமாக வடமாகாணத்தில் நடைபயணம் செய்த ஒரேயொரு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மட்டும்தான். அந்தளவுக்கு தமிழ் மக்கள் அவர் மீது அக்கறை கொண்டிருக்கின்றார்கள். இந்த அரசாங் கம் எப்போதும் மக்கள் நேயமிக்க அரசாங் கமாகவே இருக்கும். மக்கள் மீது அக் கறைகொண்ட அரசாங்கமாகவே இருக்கும்.

கடந்த காலத்தில் ஒரு மக்கள் பிரதிநிதி எந்தளவு மக்கள் பணத்தை வீணடிக்க முடியுமோ அந்தளவுக்கு வீணடித்திருக் கின்றார்கள். நாங்கள் மக்கள் பணத்தை வீணடிக்காமல் மக்களுக்கே கொண்டு செல்லும் செயற்பாட்டையே முன்னெடுப் போம்.

இதேபோன்று இனவாத ரீதியாக சிந்திக்கும் ஆட்சியாளர்கள் இந்த தேசிய மக்கள் சக்தியில் இல்லை. அனை வருக்கும் கிடைக்கவேண்டிய விடயங்கள் கிடைக்கவேண்டும் என்பதற்காக தேசிய மக்கள் சக்திசெயற்படும். – எனவும் தெரிவித்தார்.














# தமிழ்த் தேசியப் பசுமை இயக்க ஏற்பாட்டில் நல்லூரில் மாணவர்களை வலுவூட்டுகின்ற 'பசுமை அறிவொளி'!

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் மாணவர்களை வலுவூட்டும் "பசுமை அறிவொளி" நிகழ்ச்சி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக வவுனியா பிராந்தியத்தின் பிரதி நீர்ப் பாசனப் பணிப்பாளர் எந்திரி ச. சர்வராஜா கலந்து கொண்டிருந்தார். சிறப்பு விருந்தினராகக் கனிய அளவையாளர் ரோகினி ஜெயராம் பங்கேற்றிருந்தார்.

மாணவர்களுக்குச் சூழல் அறிவைப் போதித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களைச் சூழல் பாதுகாப்பில் பங்கேற்பாளராக்கும் நோக்குடனும், அவர்களில் பல்துறை ஆளுமையை விருத்தி செய்யும் நோக்குடனும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் "பசுமை அறிவொளி" நிகழ்ச்சித் திட்டத்தைக் கிராமங்களில் நடத்தி வருகின்றது.

இதன் தொடர்ச்சியாகவே கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூரில் இந்நிகழ்வு நடைபெற்றுள்ளது.

வரவேற்புரையைப் பசுமை இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினர் பா. காசிநாதன் ஆற்ற, நன்றியுரையை பொதுச் செயலாளர் ம. கஜேந்திரன் ஆற்றியிருந்தார். பொருளாளர் க. கேதீஸ் வரநாதனும் பங்கேற்றிருந்த இந்நிகழ்ச்சியில் நூற்றுக்கும் அதிகமான மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் கலந்து கொண்டிருந்தார்கள்.

மாணவர்கள் அனைவருக்கும் சூழல் விழிப்புணர்வுப் படங்களும், மேற்கோள்களும் பொறிக்கப்பட்டிருந்த அப்பியாசக் கொப்பிகள் வழங்கி வைக்கப்பட்டன. இதற்கான நிதி அனுசரணையைக் கனடாவில் இயங்கிவரும் றொறன்ரோவின் மனிதநேயக் குரல் அமைப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.












# திருகோணமலை சுற்றுலாத்துறை பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வு

## கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில்

**(ஹஸ்பர் ஏ.எச்.)**

திருகோணமலை மாவட்டத்தின் சுற்றுலாத் துறை பற்றி உருவாகியுள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஒரு சிறப்பு கலந்துரையாடல் நேற்று, சுற்றுலா துறை பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரட்ணசேகர ஆகியோரின் தலைமையில், திருகோணமலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இதன் போது, சுற்றுலா துறையில் முதலீடு செய்ய முன்வரும் முதலீட்டாளர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான நிலங்களில் உள்ள அடிப்படை வசதிகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து, சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவர்களுடன் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வெளிநாட்டு விவகாரங்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, மாகாண சுற்றுலா துறை பணியகத்தின் தலைவர் பிரியந்த மலவன்னகொட மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் உட்பட மாவட்டத்தின் சம்பந்தப்பட்ட பல நிறுவனத் தலைவர்கள், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

சுற்றுலா துறை பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன மற்றும் மாகாண சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் தலைவர் பிரியந்த மலவன்னகொட ஆகியோர், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான எல்ஸ்வத்த, இறக்கக்கண்டி, நிலாவெளி, சலப்பையாரு, குச்சவெளி ஆகிய பகுதிகளில் உள்ள நிலங்களை ஆய்வு செய்யும் கண்காணிப்பு விஜயத்திலும் பங்கேற்றனர்.





# தொண்டமனாறு - வல்லை துன்னாலை வீதி திருத்தப் பணிகள் நேற்று ஆரம்பம்!

அரசின் திறைசேரி நிதியில் இருந்து தொண்டமனாறு - வல்லை துன்னாலை வீதி புனரமைப்பு வேலைகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இதற்கான அடிக்கல் நாடும் நிகழ்வு வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினரும், தேசிய மக்கள் சக்தி அமைப்பாளருமான நிஷாந்தன் ஜனனி தலைமையில் தொண்டமனாறு சந்தி வீதியில் நேற்று மாலை இடம்பெற்றது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்ள 3.9 கிலோ மீற்றர் நீளமான இந்த வீதி, 252 மில்லியன் ரூபா செலவில் புன்னரமைக்கப்படவுள்ளது.

குறித்த நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வடமராட்சி அபிவிருத்தி குழு தலைவருமான ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி பிரதம விருந்தினராக கலந்து கொண்டு முதல் கல்லை வைத்துத் திருத்தப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் நடராசா திருலிங்கநாதன், வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர்கள், தேசிய மக்கள் சக்தியின் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் புலோலயூர் ரமணன், தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளரும், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்ருமான சாம், வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர்களான அன்பு, திருமதி நிஷாந்தன் ஜனனி, சிகரம் அமைப்பின் வடக்கு மாகாண அமைப்பாளரும், என்.பி.பி. உறுப்பினருமான உதயபாஸ்கர் உட்பட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த வீதி கடந்த அரசால் புன்னராமப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதும், இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# 3 ஆவது பொருளாதார நாடு இலக்கை நோக்கி இந்தியா

## குடியரசுத் தலைவர் முர்மு உரை



உலகின் 3 ஆவது பெரிய பொருளாதார நாடு என்ற இலக்கை நோக்கி இந்தியா செல்கிறது என்று குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார்.

நாட்டின் 77 ஆவது குடியரசு தின விழாவை முன்னிட்டு குடியரசுத் தலைவர் நாட்டு மக்களுக்கு நேற்று ஆற்றிய உரையில்,

“உலகளவில் நிச்சயமற்ற தன்மை நிலவும் நிலையில், நமது நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகிறது. உலகின் 3 ஆவது பெரிய பொருளாதார நாடு என்ற இலக்கை நோக்கி இந்தியா செல்கிறது.

ஜி.எஸ்.டி. வரியை மத்திய அரசு குறைத்தது நாட்டின் பொருளாதாரத்தை மேலும் பலப்படுத்தும். தொழிலாளர் சீர்திருத்தங்கள் தொழிலாளர்களுக்கு பயன் அளிக்கும்.

தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை அதிகரிக்கும். முதலில் நாடு என்ற உணர்வுடன் நாம் அனைவரும் இணைந்து பணியாற்றி, இந்தியாவை மேலும் சிறப்படையச் செய்ய வேண்டும். தேசபக்தி உணர்வை வலுப்படுத்த குடியரசு தினம் ஒரு வாய்ப்பு..

உலக வரலாற்றில் மிகப் பெரிய குடியரசின் அடிப்படை ஆவணமாக இந்திய அரசியல் சாசனம் உள்ளது. 2047 ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதில் இளைஞர் சக்தி முக்கிய பங்கு வகிக்கும்.” என்று தெரிவித்தார்.

# அனைத்து கட்சிகளும் எமக்கு தோழமையான கட்சிகள் தான்

## கூட்டணி குறித்து பிரேமலதா உரை



“தமிழ்நாட்டிலும், மத்தியிலும் உள்ள அனைத்து கட்சிகளும் தே.மு.தி.கவுக்கு தோழமை கட்சிகள் தான். மக்களுக்கு நல்லதுசெய்யும்வகையில்ஒருமகத்தான கூட்டணியை தே.மு.தி.க. அமைக்கும். தே.மு.தி.கவுக்கு உரிய இடங்கள் கிடைக்கும்.”

– இவ்வாறு தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா தெரிவித்தார்.

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை அருகே செம்பட்டி கிராமத்தில் தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரமலதா நேற்று பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது, முத்தரையர் உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மேலும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டுப் புத்தங்கள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து அருப்புக்கோட்டை புதிய பஸ்நிலையம் எதிரே நடைபெற்ற பிரச்சாரத்தில் அவர் பேசுகையில்,

“தமிழகம் முழுவதும் நேரடியாக சென்று மக்களை சந்திக்க இருக்கிறேன்.

இது நெசவாளர்கள் அதிகம் உள்ள பூமி. விவசாயிகளுக்கும் நெசவாளர்களுக்கும் தேமுதிக எப்போதும் உற்ற நண்பனாக இருக்கும். ஒரு காலத்தில் நெசவாளர்களுக்கு பிரச்சினை வந்த போது ஒரு கட்சி பிரியாணி, ஒரு கட்சி கஞ்சியும் கொடுத்தாங்க. ஆனால், விஜயகாந்த மட்டும் தான் நீங்க நெசவு செய்த அந்த துணிகளை 10 லட்சம் ரூபாவுக்கு தன் சொந்த செலவிலேயே வாங்கி தமிழ்நாடு முழுக்க அதை மக்களுக்கு கொடுத்து உங்களுக்கு பெரும் மதிப்பையும் கௌரவத்தையும் உருவாக்கிக் கொடுத்தார்.

இதே அருப்புக்கோட்டை தொகுதியில் ராமானுஜபுரத்தில் பிறந்து வளர்ந்தவர் விஜயகாந்த். விஜய பிரபாகரன் இத்தொகுதியில் போட்டியிட்டார். உண்மை மறைக்கப்பட்டு அவர் வெற்றி பெற்றது செல்லாது என்று அறிவிக்கப்பட்டது. கடவுள் இருந்தால் நிச்சயம் தர்மம் ஜெயிக்கும்.

விஜய பிரபாகரன் எப்பொழுதும் விருதுநகர் மாவட்ட மக்களுக்கு துணை நிற்பார். அவர் எப்பவுமே உங்கள் வீட்டுப் பிள்ளை. அவரு என்னைக்குமே மக்களோட மக்களாக இருந்து இந்த விருதுநகர் தொகுதிக்கு நல்லது செய்வார்.

நல்லவர்கள் லட்சியம் வெல்வது நிச்சயம். தர்மம் வெல்லும், நியாயம் கிடைக்கும் என்று சொல்லி 2026 சட்டமன்ற தேர்தல் தமிழ்நாட்டுக்கு மக்களுக்கும் நல்லதுசெய்யும்வகையில்ஒருமகத்தான கூட்டணியை தே.மு.தி.க. அமைக்கும். அது மக்களும் தொண்டர்களும் விரும்பும் ஒரு கூட்டணியாக அனைவரும் வரவேற்கும் ஒரு கூட்டணியாக நிச்சயமாக இருக்கும். விரைவில் தேர்தல் வரும் அனைவரும் தயாராக இருங்கள். ஒரு நல்ல ஆட்சியை கொண்டு வர வேண்டியது நம் கடமை. எனவே 2026 நிச்சயம் மக்களுக்கு நல்லது நடக்கும் ஒரு ஆண்டாக இருக்கும்.” – என்றார்.



# வீரதீர செயலுக்கான விருதுகளை வழங்கினார் முதல்வர் ஸ்டாலின்

வீரதீர செயலுக்கான அண்ணா பதக்கங்கள், காந்தியடிகள் காவலர் பதக்கங்கள், விருதுகளை சென்னையில் நடந்த குடியரசு தின விழாவில் முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

'அண்ணா' பதக்கங்கள் கடந்த 2025 மே 25 ஆம் திகதி கேரளாவில் இருந்து வந்த சுற்றுலா பயணிகளின் கார் ஒன்று குன்னூரில் ஆற்றில் சிக்கிக் கொண்டது. 3 பயணிகள் உயிருக்குப் போராடினர். நீலகிரி மாவட்டம் குன்னூர் தீயணைப்பு நிலைய வீரர்கள் சங்கர், சுரேஷ், ரமேஷ் குமார் ஆகிய மூவரும் இடுப்பில் கயிற்றைக் கட்டிக்கொண்டு, சுழலும் நீரில் துணிச்சலுடன் குதித்தனர். ஆற்றில் நீந்திச் சென்று, காரில் சிக்கிய 3 பேரையும் பத்திரமாக மீட்டனர்.

கன்னியாகுமரியை சேர்ந்தவர் பீட்டர் ஜான்சன். கடந்த ஜூன் 1 ஆம் திகதி தாமிரபரணி ஆற்றில் விழுந்த 2 சிறுவர்களை மீட்பதற்காக பீட்டர் ஜான்சன் ஆற்றில் குதித்தார். நீந்திச் சென்று, 2 சிறுவர்களையும் மீட்டு கரையில் சேர்த்தார். ஆனால், வலுவான ஆற்றோட்டத்தில் சிக்கி அவர் உயிரிழந்தார். வீரதீர செயலுக்கான 'அண்ணா' பதக்கங்கள் தீயணைப்பு வீரர்கள் சங்கர், சுரேஷ், ரமேஷ் குமார் ஆகியோருக்கு வழங்கப்பட்டன. மறைந்த பீட்டர் ஜான்சனுக்கான பதக்கத்தை அவரது மனைவி ஜெஸ்ஸி பெற்றுக் கொண்டார்.

சிறந்த பொலிஸ் நிலையங்களுக்கான முதல்வரின் விருதை மதுரை மாநகரம், திருப்பூர் மாநகரம், கோவை மாவட்டம் ஆகியவை பெற்றன. விருதாளர்கள் அனைவரும் முதல்வர் ஸ்டாலினுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

# கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் அடிபணிந்தது ட்ரம்ப் நிர்வாகம்!



மினியாபோலிஸில் கடந்த சனிக்கிழமை குடியேற்றத் தடுப்பு முகவர்களால் அலெக்ஸ் ப்ரெட்டி (வயது 37) என்ற தாதி சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் குறித்து, தனது நிர்வாகம் அனைத்தையும் தீவிரமாக மீளாய்வு செய்து வருவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

மினியாபோலிஸ் நகரிலிருந்து இறுதியில் குடியேற்றத் தடுப்பு முகவர்களைத் திரும்பப் பெறப்போவதாக ட்ரம்ப் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், அதற்கான காலக்கெடு எதையும் அவர் குறிப்பிடவில்லை. துப்பாக்கிச் சூடு சம்பவங்களை நான் விரும்புவதில்லை.

ஆனால், ஒருவர் போராட்டக்களத்திற்கு சக்திவாய்ந்த, தோட்டாக்கள் நிரப்பப்பட்ட துப்பாக்கியுடன் வருவதையும் நான் விரும்பவில்லை என வோல் ஸ்ட்ரீட் ஜர்னலுக்கு அளித்த பேட்டியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அலெக்ஸ் ப்ரெட்டி துப்பாக்கியைக் காட்டி மிரட்டியதாக உள்நாட்டு பாதுகாப்புத் துறை கூறுகிறது.

ஆனால், அவர் கையில் கைபேசி மட்டுமே இருந்ததாகவும், அவரிடம் இருந்த துப்பாக்கி சட்டப்பூர்வமாக பதிவு செய்யப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் உள்ளூர் அதிகாரிகள் மற்றும் அவரது குடும்பத்தினர் மறுக்கின்றனர்.

ஃபெடரல் முகவர்கள் தங்களைச் சம்பவ இடத்திற்குள் நுழைய விடாமல் தடுத்ததாக மினியாபோலிஸ் பொலிஸ் தலைவர் பிரையன் ஓஹாரா குற்றம் சாட்டியுள்ளார். சுட்டுக் கொல்லப்பட்ட அலெக்ஸ் ப்ரெட்டிக்கு எவ்வித குற்றப் பின்னணியும் இல்லை என நீதிமன்ற ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால், அவரை உள்நாட்டு பயங்கரவாதி என ட்ரம்ப் நிர்வாகம் வர்ணித்துள்ளது.

ஜனநாயகக் கட்சியினர் மட்டுமன்றி, பில் காசிடி போன்ற முக்கிய குடியரசுக் கட்சி உறுப்பினர்களும் இந்தச் சம்பவம் குறித்து விரிவான விசாரணை கோரியுள்ளனர்.

வழக்கமாக ட்ரம்பிற்கு ஆதரவளிக்கும் தேசிய துப்பாக்கிச் சங்கம் கூட, இந்தச் சம்பவம் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து நியூயோர்க், சிகாக்கோ, லாஸ் ஏஞ்சல்ஸ் போன்ற நகரங்களில் போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன.








# அமெரிக்காவில் ‘பெர்ன்’ பனிப்புயல்: 17 பேர் பலி; 10,000 விமானங்கள் ரத்து

அமெரிக்காவின் பல மாநிலங்களில் வீசி வரும் கடும் பனிப்புயல், உறைபனி மற்றும் குளிர் காற்று காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக முடங்கியுள்ளது.

நாட்டின் பாதிக்கும் மேற்பட்ட மாநிலங்களில் வானிலை அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பல்வேறு மாநிலங்களில் பனிப்புயல் தொடர்பான அனர்த்தங்களில் சிக்கி இதுவரை குறைந்தது 17 பேர் உயிரிழந்துள்ளனர் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும், உயிரிழப்பிற்கான துல்லியமான காரணங்களைக் கண்டறிய அதிகாரிகள் இன்னும் ஆய்வு செய்து வருகின்றனர்.

கடும் பனிப்பொழிவு மற்றும் பனி படிவங்கள் காரணமாக மின் கம்பிகள் அறுந்து விழுந்ததில் 800,000 இற்கும் அதிகமானோர் இருளில் மூழ்கியுள்ளனர்.

இதில் டென்னிசி மாநிலத்தில் மட்டும் சுமார் 2.5 லட்சம் பேர் மின்சாரமின்றி தவிக்கின்றனர்.

அதேநேரம், அமெரிக்கா முழுவதும் 10,000 இற்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இதில் நியூயோர்க் நகரம் மிக மோசமான பாதிப்புகளைச் சந்தித்துள்ளது.

டெக்சாஸ், ஓஹியோ, டென்னிசி மற்றும் நியூயோர்க் உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பாதிப்படைந்துள்ள நிலையில், பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.











# இன்றைய ராசி பலன்கள்- 27.01.2026




உண்ட வீட்டுக்கு ரெண்டகம் பண்ணும் கூட்டம் உங்களுக்கு ஆசை வார்த்தை சொல்லும். அதில் மயங்கி இருப்பதை இழந்து விடாதீர்கள். வளர்பிறை சந்திரன் நீங்கள் செய்யும் வியாபாரத்துக்குப் பல வகையில் உதவியாக இருப்பார். இரு மடங்கு எச்சரிக்கையோடு எதையும் செய்யுங்கள். நல்ல நண்பர்களே விரோதியாக மாறி தொழிலுக்கு இடையூறு செய்வார்கள். ஏற்றுமதி இறக்குமதி தொழிலை சிறப்புடன் நடத்துவீர்கள். வேலைக்காக நீங்கள் செய்திருந்த விண்ணப்பம் பரிசீலிக்கப்படுவதில் சுணக்கம் உண்டாகும். அலைச்சல் அதிகமாகி உடல் சோர்வு உண்டாகும். கொடுத்த இடத்தில் பணம் திரும்பி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். ஏதாவது வீட்டுச் செலவு வந்து பொருளாதார சிக்கலை உண்டாக்கும்.




செலவுகளை கட்டுப்படுத்த எவ்வளவு முயற்சி செய்தாலும் அதில் உங்களுக்கு தோல்விதான் கிடைக்கும். புதிதாகத் தொடங்கும் தொழிலுக்கு நண்பர்களின் உதவி தாராளமாக கிடைக்கும். போட்டி போட்டு தொழிலில் வெற்றி கண்டு எதிரிகளை பொறாமைப்பட வைப்பீர்கள். போட்டி பந்தயங்களில் மிகப்பெரிய லாபத்தை அடைவீர்கள். சொந்த பந்தங்களால் மனச்சங்கடம் அடைவீர்கள். கலைத்துறையினருக்கு பொற்காலம். சனி 7 ஆம் வீட்டில் இருக்கிறார். துணி வியாபாரிகள் துணிவோடு தொழிலில் இறங்கி அதிக மேன்மை அடைவார்கள். உங்களின் வளர்ச்சியை கண்டு எதிரிகள் வாயடைத்து நிற்பார்கள். தேவையில்லாத செலவுகளால் கையிருப்பு கரையும். வியாபாரத்திற்கு இடையூறாக இருந்த வில்லங்கங்கள் விலகும்.




துணிச்சலுடன் தொழிலை மேம்படுத்துவீர்கள். வளர் நிலவின் வசந்த ஒளி உங்கள் வாழ்க்கை பாதையில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும். இழுபறியாக இருந்த இடப் பிரச்சனையை புத்திசாலித்தனமாக தீர்ப்பீர்கள். தாய் மாமன் வகையில் சில சங்கடங்கள் வரலாம். உறவினர்களுடன் ஒருமைப்பாட்டோடு நடந்து கொள்ளுங்கள். நினைத்த காரியத்தை நண்பர்களில் உதவியோடு சிறப்பாக முடிப்பீர்கள். ஏற்றுமதி இறக்குமதி தொழில் மிகுந்த லாபத்தை கொடுக்கும்.

ஏதாவது ஒரு பிரச்சனை குடும்பத்தில் உருவாகி மன நிம்மதியை கெடுக்கும். உங்கள் செல்வாக்கு அதிகரிக்க விருந்து நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வீர்கள்.




பொருளாதாரத்தில் எதிர்பார்த்த வெற்றியை அடைந்து பூரிப்புக் கொள்வீர்கள். நீண்ட காலமாக இழுவையில் இருந்த வழக்கை முடித்து வைப்பீர்கள். சந்திரனின் நகர்வுகள் சில முன்னேற்றமான பலன்களை கொண்டு வரும். புதிய நண்பர்களின் சேர்க்கையால் வியாபாரத்தில் பல வெற்றிகளை அடைவீர்கள்.

பிள்ளைகள் படிப்பில் அதிக அக்கறை காட்டுவார்கள். கல்வி செலவு அதிகரித்து கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்படும். உறவினர்களும் நண்பர்களும் உதவிகரமாக இருப்பார்கள். மனம் விட்டு பேசி குடும்ப பிரச்சினையைத் தீர்ப்பீர்கள். காதல் கைகூடி வந்து நீண்ட காலக் கனவு நிறைவேறும்.கடல் கடந்து பயணம் செல்லக் கூடிய வாய்ப்பை நண்பர் ஏற்படுத்தித் தருவார்.




எதிர்ப்புகளை முறியடித்து தொழிலை நிலைப்படுத்த முனைப்போடு செயல்படுவீர்கள். கூட்டுத் தொழிலில் ஈடுபட அதிக ஆர்வம் காட்டுவீர்கள். சந்திரனின் நகர்வுகள் சில நேரங்களில் பாதகமான நிலையை ஏற்படுத்தலாம். பக்குவமாக நடந்து கொள்ளுங்கள். செவ்வாய் 7 ஆம் இடத்தில் இருக்கிறார்.

உங்கள் எண்ணப்படி திருமண விடயம் சுலபமாக நடக்காது. சுக்கிரன் 5 ஆம் வீட்டில் இருக்கிறார். கலைத்துறையினர் சில சிரமங்களை சந்திக்க வேண்டிவரும்.

கட்டுமான தொழில் கை கொடுத்து தூக்கிவிடும். இரும்பு சம்பந்தப்பட்ட வியாபாரங்கள் அமோகமாக நடக்கும். ராகு ராசியிலேயே அமர்ந்திருக்கிறார்.




கூட இருந்தே உங்களை கெடுக்க நினைத்த உறவினர்களின் உள் நோக்கத்தை இந்த வாரத்தில் தெளிவாக புரிந்து கொள்வீர்கள். அவர்களிடம் இருந்து விலகி இருப்பது மிகவும் நல்லது. சந்திரனின் இடப்பெயர்ச்சியும் அவ்வளவு சாதகமான நிலையில் இல்லை. முதலீட்டுக்கு தகுந்த வருமானம் கிடைப்பது சற்று சிரமம்.

புதிய வேலை வாய்ப்பு தேடி வரும். பதவி உயர்வு கிடைக்கும். நடைபாதை வியாபாரிகள் சிறப்பான பலனை அடைவார்கள். கலை துறையினர் பிரபலமடைவார்கள். கல்விக்காக அதிகம் செலவு செய்வீர்கள். தாய் வழி சொத்து கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு.




கணவனின் வருமானம் அறிந்து மனைவிமார்கள் செலவு செய்ய வேண்டும். இல்லை என்றால் வட்டிக்கு கடன் வாங்கி திரும்ப செலுத்த இயலாமல் கஷ்டப்பட வேண்டிய நிலை உருவாகலாம். சந்திர பகவானின் அனுக்கிரகத்தால் தொழிலில் கணிசமான லாபம் கிடைக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் பார்ப்பீர்கள். உட்காரக்கூட நேரமில்லாமல் பொருளாதாரத்தைப் பெருக்க ஓயாது வேலை பார்ப்பீர்கள். கண்ட இடங்களில் சாப்பிட்டு வயிற்றை கெடுத்துக் கொள்ளாதீர்கள். கணவன் மனைவிக்கு இடையே இருந்த கருத்து வேறுபாடு விலகி சகசமான நிலை ஏற்படும். பெற்றோரின் மனநிலையில் புரிந்து பிள்ளைகள் நடந்து கொள்வார்கள்.




யாருக்காக நீங்கள் பாடுபடுகிறீர்களோ அவர்களே உங்களை புரிந்து கொள்ளாமல் மனம் நோகும்படி நடந்து கொள்வார்கள். மிக கவனமாக செயல்பட வேண்டிய காலம். சின்ன சின்ன விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. சந்திர பகவான் நல்லது கெட்டது என கலந்து இந்த வாரத்தில் உங்களுக்கு பலனை கொடுப்பார். திட்டம் போட்டு செய்யும் தொழிலில் சில சறுக்கள் ஏற்படலாம். ஆசை வார்த்தை காட்டும் நண்பர்களை அதிகம் நம்ப வேண்டாம். அந்தஸ்தை உயர்த்திக்கொள்ள ஆடம்பரமாக செலவு செய்வீர்கள். எதிர்பார்த்த இடத்தில் தாமதம் இன்றி பணம் கிடைக்கும். தொழில் வேகமாக வளர்ச்சி அடையும்.

# இன்றைய ராசி பலன்கள்- 27.01.2026




பூர்வீக சொத்தில் சகோதர சகோதரிகளால் வில்லங்கம் உண்டாகும். அதை நிவர்த்தி செய்வதற்காக நீதிமன்றத்தை நாடி செல்வதற்கான கட்டாயம் ஏற்படும். உலவுகின்ற நிலவும் உங்களுக்கு அனுசரணையாக இல்லாததால் எதிர்பாராத செலவுகள் வந்து கையில் இருந்த காசுக்கு வெடி வைக்கும். ெ தொழில் துறைகள் சீராக நடக்கும். வியாபாரத்தில் அதிக லாபத்தை எதிர்பார்க்க முடியாத நிலை உண்டாகும். உறவினர் வகையில் ஏதாவது வில்லங்கம் வந்து மன அமைதியை கெடுக்கும். எப்படிப்பட்ட இடையூறுகள் தொழிலில் ஏற்பட்டாலும் அதை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். அரசாங்க ஒப்பந்த வேலைகளில் கால தாமதமாகும். நண்பர்களின் உதவியால் வெளிநாடு செல்வீர்கள். எதிர்பாராத பண வரவு திக்கு முக்காட வைக்கும். ஆன்மீகப் பெரியோர்களின் சந்திப்பு குடும்பத்தில் அமைதியை கொண்டு வரும்.




உடைந்து போன உறவுகளை ஒட்ட வைப்பதற்காக பாடுபடுவீர்கள். மனைவியின் தேவையறிந்து நடந்து கொண்டு மகிழ்ச்சியில் ஆழ்த்துவீர்கள். எதிர்பாராத வகையில் பணம் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆடம்பரமாக செலவு செய்வதை நிறுத்திக் கொள்ளுங்கள். தொழிலுக்கு இருந்த இடையூறுகளை தகர்த்து எறிவீர்கள். வேலை இடத்தில் எச்சரிக்கையாக இருங்கள். வீட்டில் மங்கல காரியங்கள் சிறப்பாக நடக்கும்.கொடுக்கல் வாங்கல் விவகாரங்களில் கவனமாக இருங்கள். படித்துப் பார்த்து பத்திரங்களில் கையெழுத்து போடுங்கள். பெரிய மனிதர்களின் சந்திப்பால் பொருளாதாரம் முன்னேற்றம் காண்பீர்கள். பிள்ளைகளால் சில பிரச்சினைகளை சந்திக்க வேண்டிவரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள்.




நடந்து செல்லும் இடமெல்லாம் நந்தவனமாக பூத்து சிரிக்கும் காலம் இது. எந்த தொழிலை தொட்டாலும் ஏற்றத்தை கொடுக்கும். உங்களின் செல்வாக்கும் புகழும் வெளியிடங்களில் கொடி கட்டி பறக்கும். நினைத்ததை நடத்தி முடிப்பதற்கு உறவினர்களும் நண்பர்களும் உங்களுக்கு உதவியாக இருப்பார்கள். சந்திர பகவான் வியாபார வெற்றிக்கு உறுதுணையாக நிற்கிறார். விவசாய தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள். வழக்கறிஞர்கள், கல்லூரி விரிவுரையாளர்கள் தங்களுடைய புகழை நிலை நாட்டுவார்கள். வேலை தேடியவர்களுக்கு நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் இருந்த தடைகள் அகலும். சுப காரியங்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வீட்டில் விருந்த நிகழ்ச்சிகளால் மகிழ்ச்சி பொங்கு வழியும். அரச ஆதரவு புதிய ஒப்பந்தங்கள் பெறுவதற்கு வழிவகுக்கும். அழகு பொருள் விற்பனை செய்பவர்கள், அலங்கார துறையினர் பொருளாதார முன்னேற்றம் அடைவார்கள்.




பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்த இரவு பகலாக உழைப்பீர்கள். புதிய முதலீடுகள் மூலம் தொழிலை விரிவுபடுத்தி உற்பத்தி பெருக்கத்தை உண்டு பண்ணுவீர்கள். சந்திரனின் இடப்பெயர்ச்சிகள் சிறப்பான பலன்களையே தரப்போகின்றன. பழைய கடன்கள் மள மள என்று வசூல் ஆகும். சிறு வியாபாரிகள் அபிரிமிதமான லாபத்தை பார்ப்பார்கள். அலங்கார பொருள் விற்பனை அமோக பலனை கொண்டு வரும். கலைத்துறையினருக்கு பிரகாசமான எதிர்காலத்தை ஏற்படுத்தும். வெளிநாட்டில் தங்கள் திறமையை காட்டி பெரிய லாபத்தை அடைவார்கள். வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் தொழிலில் சாதனை படைப்பார்கள். பிள்ளைகள் படிப்பில் அக்கறை காட்டி பெற்றோரை பெருமைப்படுத்துவார்கள்.

# காத்தான்குடி, ஏறாவூர்ப் பகுதிகளில் இரண்டு ஐஸ் வியாபாரிகள் கைது!



## யாழ். உள்ளூராட்சி மன்றங்களின் பெண் உறுப்பினர்களை நேற்றுச் சந்தித்து உரையாடிய சர்வதேச இராஜதந்திரிகள்!

பல்வேறு சர்வதேச நாடுகள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகள் யாழ் மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களாகப் பணியாற்றும் பெண் அரசியல் தலைவர்களை நேற்றுச் ம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கைக்கான கனடா உயர் ஸ்தானிகர், மாலைதீவு உயர்ஸ்தானிகர் மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டம் UNDP துணை வதிவிடப் பிரதிநிதி ஆகியோரே இந்தக் கலந்துரையாடலை முன்னெடுத்தனர்.

இதன்போது திறந்த மற்றும் சிந்தனைக்கான இடத்தை உருவாக்கல், பெண்களின் தலைமை பற்றிய உரையாடல், பொது அலுவலகங்களில் பெண்கள் நுழைவதற்கும் மற்றும் நிலை நிறுத்துவதற்கும் பெண்கள் தொடர்ந்து எதிர்கொள்ளும் தடைகள் குறித்தெல்லாம் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது பெண்களின் அரசியல் பங்கேற்பை முன்னேற்றுவதற்கு ஒத்துழைப்புக் கூட்டாண்மை மூலம் ஆதரவு அமைப்புகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவமும் இதன்போது உறுதிப் படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



